සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

**32 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..........................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**1.** ஒவ்வொரு பொருள், சேவை ஊடாகவும் நுகர்வோரது,
(1) தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
(2) விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படும்.
(3) தேவைகளும் விருப்பங்களும் பூர்த்தி செய்யப்படும்.
(4) தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அருமையான வளங்கள் பயன்படுத்தப்படும்.
(5) விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு அருமையான வளங்கள் பயன்படுத்தப்படும். (......)

**2.** முதனிலை உற்பத்திப்பொருட்கள் என்பது,
(1) பக்க உற்பத்திப்பொருட்கள் ஆகும்.
(2) பதனிடப்படாத மூலப்பொருட்கள் ஆகும்.
(3) துணைச் சேவைகள் ஆகும்.
(4) பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட பொருட்களாகும்.
(5) பூர்த்திசெய்யப்பட்ட பொருட்களாகும். (......)

**3.** உற்பத்திப்பொருளுக்கான 'பெறுமதி சேர்க்கப்பட்ட' என்பது,
(1) மூலப்பொருட்களுக்கான கிரயமாகும்.
(2) உற்பத்திக் கிரயமாகும்.
(3) உற்பத்திக் கிரயம், இலாபம் ஆகியவற்றின் மொத்தமாகும்.
(4) உற்பத்திக் கிரயத்துக்கும் விற்பனை விலைக்கும் இடையிலான வேறுபாடாகும்.
(5) உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகரிக்கும் பெறுமதியாகும். (......)

**4.** நிறுவனமொன்றின் உள்ளீட்டு - வெளியீட்டுச் செயன்முறை பிரதிபலிக்கப்படுவது,
(1) நிதிசார் செயன்முறை ஊடாகவாகும்.
(2) உற்பத்திச் செயன்முறை ஊடாகவாகும்.
(3) கொள்வனவு செய்தல் செயன்முறை ஊடாகவாகும்.
(4) சந்தைப்படுத்தல் செயன்முறை ஊடாகவாகும்.
(5) தகவல் முகாமைத்துவச் செயன்முறை ஊடாகவாகும். (......)

**5.** வணிகமொன்றின் பணிச்சூழல் விசையாவது
(1) நுகர்வோர் (2) முகாமையாளர்கள் (3) ஊழியர்கள்
(4) நிறுவனக் கட்டமைப்புகள் (5) உடைமையாளர்கள் (......)

**6.** சமூக நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுவதன் மூலம், வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது
(1) அரசாங்கத்துக்காகவாகும். (2) சமூகத்துக்காகவாகும்.
(3) நாட்டுக்காகவாகும். (4) வாடிக்கையாளருக்காகவாகும்.
(5) உடைமையாளருக்காகவாகும். (......)



Department of Examinations Sri Lanka

**7.** சிறப்புச் சந்தைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது நுகர்வோர்,
(1) ஊழியர்களின் நேரடி அவதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(2) எந்தவொரு சேவையையும் பெற்றுக்கொள்ள முடியும்.
(3) பொருட்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்ய முடியும்.
(4) ஏராளமான உற்பத்திப்பொருட்களில் இருந்து தெரிவை மேற்கொள்ளமுடியும்.
(5) பொருட்களின் விலையை பேரம்பேச முடியும். (……)

**8.** பின்வரும் அட்டவணையானது கழிவு முகாமைத்துவம் தொடர்பான 4R எண்ணக்கருவையும் அதனுடன் தொடர்புடைய உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

| எண்ணக்கரு | உதாரணங்கள் |
|---|---|
| (i) மீள்சுழற்சி | A - அச்சிடுவதற்குப் பதிலாக கடிதங்களை கணினித் திரையில் வாசித்தல் |
| (ii) மீள் பதிலீடு | B - சிறுகுறிப்புக்களை எழுதுவதற்கு கழிவுக் கடதாசிகளைப் பயன்படுத்துதல் |
| (iii) பாவனையைக் குறைத்தல் | C - பாவனையில் இருந்து அகற்றப்பட்ட கைத்தொலைபேசி பாகங்களைப் பயன்படுத்தி ஒலிம்பிக் பதக்கங்களைத் தயாரித்தல் |
| (iv) மீள்பாவனை | D - பழங்கள் மற்றும் காய்கறிகளின் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரித்தல் |

மேலே தரப்பட்டுள்ள எண்ணக்கருக்களின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக உதாரணங்கள் சரியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, D, B, C (2) B, C, A, D (3) B, D, C, A (4) D, A, C, B (5) D, C, A, B (……)

**9.** பின்வரும் அட்டவணையானது வணிக நோக்கங்களையும் அவற்றை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

| நோக்கங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|
| (i) விற்பனை வருமானத்தின் அதிகரிப்பு | A - திணைக்களங்களுக்கு இடையிலான உள்ளகத் தொடர்புகளை அதிகரித்தல் |
| (ii) காசுப் பாய்ச்சலின் அதிகரிப்பு | B - பொருட்களின் தரத்தினை விருத்தி செய்தல் |
| (iii) நுகர்வோர் திருப்தியின் அதிகரிப்பு | C - காப்புறுதி வசதிகளை வழங்குதல் |
| (iv) ஊழியர்களது திறன்களை மேம்படுத்தல் | D - வியாபாரக் கழிவுகளை வழங்குதல் |
| (v) ஊழியர் நலன்புரிசேவைகளை அதிகரித்தல் | E - கடன் புரள்வுக் காலத்தைக் குறைத்தல் |

மேலே தரப்பட்டுள்ள நோக்கங்களின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக அவற்றுடன் பொருந்தக்கூடிய நடவடிக்கைகள் சரியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, D, E, C, B (2) B, E, C, A, D (3) B, C, D, E, A (4) D, B, A, E, C (5) D, E, B, A, C (……)

**10.** நிறுவனமொன்று நிலையான சொத்தொன்றினை விற்கும்போது அதன் கிரயத்திலும் பார்க்க மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளும் தொகையானது, வரியைக் கணிப்பிடும்போது
(1) இலாபமாகக் கருதப்படுகிறது.
(2) மூலதன ஆதாயமாகக் கருதப்படுகிறது.
(3) வருவாயாகக் கருதப்படுகிறது.
(4) மூலதன ஒதுக்கமாகக் கருதப்படுகிறது.
(5) வருவாய் ஆதாயமாகக் கருதப்படுகிறது. (……)

**11.** பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கு அமைவாக,
(1) வணிகத்தின் பங்காளர்களது மூலதனத்துக்கு வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்.
(2) மேலதிக மூலதன முதலீட்டுக்கு 5% வருடாந்த வட்டியைப் பெற பங்காளர்கள் உரித்துடையவராவர்.
(3) பங்காளர்கள் வழங்கும் சேவைக்காக சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.
(4) பங்காளர் ஒருவரின் விருப்பத்துடன் புதிய பங்காளர் ஒருவரை இணைத்துக் கொள்ள முடியும்.
(5) பங்காளர்கள் முதலீடு செய்த மூலதன விகிதாசாரத்திற்கு அமைவாக இலாப நட்டங்கள் பகிரப்படுதல் வேண்டும். (……)

**12.** சாதாரண பங்குதாரர்களுடன் ஒப்பிடும்போது முன்னுரிமைப் பங்குதாரர்கள் :

| | வாக்களிக்கும் உரிமை | கலைப்பின்போது முதலீட்டை மீளப் பெறுவதற்கான முன்னுரிமை | பங்குலாபத்திற்கான முன்னுரிமை |
|---|---|---|---|
| (1) | உரித்துடையவர்கள் | உரித்துடையவர்கள் | உரித்துடையவர்கள் |
| (2) | உரித்துடையவர்கள் | உரித்துடையவர்கள் | உரித்துடையவர்களல்ல |
| (3) | உரித்துடையவர்களல்ல | உரித்துடையவர்களல்ல | உரித்துடையவர்களல்ல |
| (4) | உரித்துடையவர்களல்ல | உரித்துடையவர்கள் | உரித்துடையவர்கள் |
| (5) | உரித்துடையவர்களல்ல | உரித்துடையவர்களல்ல | உரித்துடையவர்கள் |

(……)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**13.** முயற்சியாண்மையாளர்கள் எப்பொழுதும்,
(1) நிதிசார் ஆதாயங்களை மட்டும் எதிர்பார்ப்பர்.
(2) உயர்வான சமூக அந்தஸ்தை எதிர்பார்ப்பர்.
(3) புதிய வணிக முயற்சிகளில் வளங்களை முதலீடு செய்வர்.
(4) தற்போது நடாத்தப்படும் வணிகத்தை அவ்வாறே கொண்டு நடாத்துவர்.
(5) சகல தீர்மானங்களையும் எடுப்பதற்கு முகாமையாளர்களுக்கு இடமளிப்பர். (……)

**14.** நிகழ்நிலை கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவது,
(1) நிறுவனத்தின் பங்குபற்றல் இன்றியாகும்.
(2) நிதிசார் பங்குபற்றல் இன்றியாகும்.
(3) இலத்திரனியல் உபகரணத்தின் பங்குபற்றல் இன்றியாகும்.
(4) வழங்குனரின் பங்குபற்றல் இன்றியாகும்.
(5) இடைத்தரகரின் பங்குபற்றல் இன்றியாகும். (……)

**15.** ஆயுட் காப்புறுதியானது,
(1) சேமிப்பிற்குச் சமமானது.
(2) இழப்பீட்டுத் தத்துவத்திற்கு அமைவானது.
(3) இன்னொருவருக்கு மாற்றக்கூடியது.
(4) குறித்த ஓர் இடரினால் கட்டுப்படுத்தப்படாதது.
(5) வருடாந்தம் மீள் புதுப்பித்தல் செய்யப்பட வேண்டியது. (……)

**16.** ஊழியர் ஊக்குவிப்பு முறைகள் சில பின்வருமாறு:
A - பதவியுயர்வு
B - பங்கு உடைமையாண்மை
C - வெகுமதிகள்
D - கடன் வசதிகள்
E - சலுகை விலையில் உற்பத்திப்பொருட்களை வழங்குதல்
F - பயிற்சி
G - உபகாரக் கொடுப்பனவுகள்
H - செயற்றிறன் மதிப்பீடு
I - படிகள் (allowances)

மேலே தரப்பட்டவற்றுள் நிதிசார்ந்த ஊக்குவிப்பு முறைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?
(1) A, C, E, F, G (2) B, D, E, G, I (3) B, E, G, H, I (4) D, E, F, G, H (5) D, E, G, H, I (……)

**17.** பின்வரும் அட்டவணையானது சில செய்திகளையும் சில தொடர்பாடல் முறைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

| | செய்திகள் | தொடர்பாடல் முறைகள் |
|---|---|---|
| (i) | பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர்ப்பட்டியலை பாடசாலையில் காட்சிப்படுத்துதல் | A - கடிதம் |
| (ii) | விரைவான கட்டளைக்காக சர்வதேச வழங்குனருடன் வாய்மொழி மூலம் தொடர்பாடுதல் | B - இலத்திரனியல் தபால் |
| (iii) | ஊழியர் நியமனமொன்றை அஞ்சல் மூலம் அறிவித்தல் | C - அறிவித்தல் பலகை |
| (iv) | நிறுவனத்துக்கு வந்து சேரக்கூடிய வகையில் விளக்கமான பாதை வரைபடத்தை விரைவாக அனுப்புதல் | D - மகாநாடு |
| (v) | நாட்டின் பொருளாதார நிலை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் | E - தொலைபேசி அழைப்பு |

மேலே தரப்பட்டுள்ள செய்திகளின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக அதற்குப் பொருத்தமான தொடர்பாடல் முறைகளை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) B, C, A, E, D (2) B, C, E, D, A (3) C, B, D, A, E (4) C, E, A, B, D (5) E, B, C, A, D (……)

**18.** அமையவியல் (ஏற்பாட்டியல்) முறைமையின் குணாம்சங்கள் சில பின்வருமாறு:
A - பொருட்களுக்குக் கட்டளையிடுதல்
B - பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல்
C - வாடிக்கையாளர்களுடன் தொடர்புபடுதல்
D - விற்பனை மேம்படுத்தல்
E - பொருட்களை வழங்குவதற்காக மீளப் பெற்றுக்கொள்ளுதல்
F - தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்
G - பொருட்களைப் பரிசோதித்தல்
H - சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்
I - கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையே சமநிலையைப் பேணுதல்
J - ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

மேலே தரப்பட்டவற்றுள் பண்டகசாலையிடுதலுக்குரிய குணாம்சங்களை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?
(1) A, B, C, D, I (2) B, C, H, I, J (3) B, E, F, G, H (4) D, E, F, G, J (5) F, G, H, I, J (……)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**19.** பின்வரும் அட்டவணையானது உற்பத்திப்பொருட்களையும் சில விநியோக வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

| உற்பத்திப்பொருட்கள் | விநியோக வழிமுறை |
|---|---|
| (i) நுவரெலியா காய்கறிகள் | A - உற்பத்தியாளர் → சில்லறை வியாபாரி → நுகர்வோர் |
| (ii) இறக்குமதி செய்யப்பட்ட பால்மா | B - உற்பத்தியாளர் → மொத்த வியாபாரி → சில்லறை வியாபாரி → நுகர்வோர் |
| (iii) திருமண கேக் | C - உற்பத்தியாளர் → நுகர்வோர் |
| (iv) சிற்றளவிலான வீட்டுத்தோட்ட பழங்கள் | D - உற்பத்தியாளர் → முகவர் → மொத்த வியாபாரி → சில்லறை வியாபாரி → நுகர்வோர் |

மேலே தரப்பட்ட உற்பத்திப்பொருட்களின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக அவற்றின் விநியோக வழிமுறைகளை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?

(1) A, C, B, D (2) A, D, C, B (3) B, C, A, D (4) B, D, C, A (5) C, B, D, A (......)

**20.** மானிடத் திறன்களுடனான முகாமையாளர்கள்,
(1) ஊழியர்களின் தேவைகள் தொடர்பில் உணர்வுபூர்வமாயிருப்பவர்கள் ஆவர்.
(2) ஊழியர்களுக்கு எப்பொழுதும் தலைமைத்துவத்தை வழங்குபவர்கள் ஆவர்.
(3) ஊழியத் திறன்களுக்கு மாத்திரம் பெறுமதியளிப்பவர்கள் ஆவர்.
(4) உயர்மட்ட முகாமைத்துவத்துக்கு மாத்திரம் முக்கியமானவர்கள் ஆவர்.
(5) இடைத்தர முகாமைத்துவத்துக்கு மாத்திரம் முக்கியமானவர்கள் ஆவர். (......)

**21.** வணிகமொன்றின் தூரநோக்கானது,
(1) குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஊழியர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலை எடுத்துக்காட்டும்.
(2) வணிகமொன்று செல்ல வேண்டிய போக்கினையும் அதன் சகல விவகாரங்களினதும் உள்ளடக்கத்தையும் எடுத்துக்காட்டும்.
(3) முகாமையாளர்களது நோக்கத்தை ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் வழிகாட்டும்.
(4) நெகிழ்வுத்தன்மையும் இணங்கிச்செல்லும் தன்மையும் வினைத்திறனுடைய தன்மையும் கொண்ட வணிகம் என்பதனை எடுத்துக்காட்டும்.
(5) பிரச்சினை தீர்வுக்குப் பொருத்தமான தந்திரோபாயங்களை இனங்காணும் ஆற்றலை எடுத்துக்காட்டும். (......)

**22.** சேவை வழங்கும் நிறுவனமொன்று உற்பத்தி நிறுவனமொன்றில் இருந்து வேறுபடுவது,
(1) ஊழிய கிரயத்தின் அடிப்படையிலாகும்.
(2) மூலப்பொருட்களின் கிரயத்தின் அடிப்படையிலாகும்.
(3) மூலதன கிரயத்தின் அடிப்படையிலாகும்.
(4) நேரடி வாடிக்கையாளர் தொடர்பின் அடிப்படையிலாகும்.
(5) உற்பத்திப்பொருட்களின் தரத்தின் அடிப்படையிலாகும். (......)

**23.** கூற்று **A :** 'தரக்கட்டுப்பாடு' என்பது உற்பத்தியில் எவ்வித குறைபாடும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உற்பத்திப்பொருட்களைப் பரிசோதனை செய்யும் செயன்முறையாகும்.

கூற்று **B :** தரக்கட்டுப்பாட்டினூடாக உற்பத்தியில் எவ்வித குறைபாடும் ஏற்படாமையினால் ஒவ்வோர் உற்பத்திப்பொருள் அலகும் உயர் தரத்தில் பேணப்படும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளில்,

(1) **A** சரியானது என்பதுடன் **B** தவறானதாகும்.
(2) **A** தவறானது என்பதுடன் **B** சரியானதாகும்.
(3) **A, B** ஆகிய இரண்டு கூற்றுகளும் தவறானவையாகும்.
(4) **A, B** ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படுகின்றது.
(5) **A, B** ஆகிய இரண்டு கூற்றுகளும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (......)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**24.** உற்பத்தி நிறுவனமொன்றின் வருடாந்த நிலையான கிரயம் ரூ. 92 000 ஆக இருக்கும்போது ஓர் அலகுக்கான மூலப்பொருள் மற்றும் ஊழியக் கிரயமானது ரூ. 5 ஆகும். அலகொன்றின் விற்பனை விலை ரூ. 9 ஆயின் 25 000 அலகுகளை உற்பத்தி செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய இலாபம்

(1) ரூ. 8000 ஆகும். (2) ரூ. 33 000 ஆகும். (3) ரூ. 125 000 ஆகும.
(4) ரூ. 133 000 ஆகும். (5) ரூ. 225 000 ஆகும். (……)

**25.** வணிகமொன்று தனது விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக அமுல்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் சில பின்வருமாறு:

A - அனுசரணை வழங்குதல்
B - வினைத்திறனை விருத்தி செய்தல்
C - மாதிரிகளை விநியோகித்தல்
D - விலைக் குறைப்புச் செய்தல்
E - விசுவாசப் புள்ளிகள் (Loyality Points) வழங்குதல்
F - விளம்பரப்படுத்தல்
G - இலவசமாக விநியோகித்தல்
H - பங்கீட்டு அட்டைகளை (கூப்பன்) வழங்குதல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் விற்பனை மேம்படுத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, E, F, G (2) A, D, E, G, H (3) B, D, E, G, F (4) C, D, E, G, H (5) C, E, F, G, H (……)

**26.** வணிகமொன்றின் திரவ விகிதமானது 2019 ஆம் ஆண்டில் 3 : 1 ஆகவும் 2020 ஆம் ஆண்டில் அது 1 : 1 ஆகவும் காணப்பட்டது. இதனூடாக வெளிப்படுத்தப்படுவது,

**கூற்று A :** திரவத்தன்மை முன்னேற்றமடைந்துள்ளது.
**கூற்று B :** குறுங்கால கடன்களை இலகுவாக செலுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளில்,

(1) **A** சரியானது என்பதுடன் **B** தவறானதாகும்.
(2) **A** தவறானது என்பதுடன் **B** சரியானதாகும்.
(3) **A, B** ஆகிய இரண்டும் தவறானவையாகும்.
(4) **A, B** ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படுகின்றது.
(5) **A, B** ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (……)

**27.** பின்வருவனவற்றுள் மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மிகவும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) தொழினுட்ப ஊழியர்களுக்கான பயிற்சியானது திசைமுகப்படுத்தல் ஆகும்.
(2) ஊழியர் அசைவானது, ஊழியர் பதவி உயர்வு ஆகும்.
(3) ஊழியர்களது வேலை மற்றும் வெளியீடு தொடர்பிலான அளவீடு செயற்றிறன் மதிப்பீடு ஆகும்.
(4) ஊழியர்களுக்கான பயிற்சியானது வேலையின் போதான பயிற்சி ஆகும்.
(5) வேலைச் செயற்றிறனை மேம்படுத்துவதற்கான பயிற்சியளித்தல் ஊழிய அபிவிருத்தி ஆகும். (……)

**28.** பின்வருவனவற்றுள் விசேட நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தலில் **உள்ளடங்காதது** எது?

(1) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள்
(2) பங்குத் தரகர்கள்
(3) மூலதன முயற்சிக் கம்பனிகள்
(4) முதனிலை விநியோகத்தர்கள் (Primary dealers)
(5) காப்புறுதிக் கம்பனிகள் (……)

**29.** வணிகமொன்றின் தரவுகள் மற்றும் தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - நேர அட்டவணை
B - அலகுக்கான நிறை
C - மாணவர் அறிக்கைப் புத்தகங்கள்
D - உற்பத்திப்பொருட்களின் விலை
E - கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள்
F - விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை
G - ஊழியர்களின் பெயர்கள்
H - காசுப் பெறுவனவு பற்றுச்சீட்டு
I - வரி இலக்கம்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் தரவுகளை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, F, G, H (2) B, D, F, G, I (3) B, D, E, G, I (4) C, D, E, G, H (5) C, E, F, H, I (……)

**30.** பிஸ்கட் உற்பத்தி நிறுவனமொன்றின் நிலையான கிரயம் ரூ. 2 000 ஆகும். ஓர் அலகுக்கான மாறும் ஊழியக் கிரயம் ரூ. 5 ஆகும். 1 000 அலகுகளை உற்பத்தி செய்யும்போது சராசரிக் கிரயமாவது,

(1) ரூ. 2 ஆகும். (2) ரூ. 3.50 ஆகும். (3) ரூ. 7 ஆகும்.
(4) ரூ. 10 ஆகும். (5) ரூ. 12 ஆகும். (……)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka, Department of Examinations Sri Lanka,

- **31** தொடக்கம் **40** வரையான வினாக்களிலுள்ள இடைவெளியைப் பொருத்தமான **சொல் / சொற்களைப்** பயன்படுத்தி நிரப்புக.

**31.** (அ) பௌதிகரீதியாகப் பயன்படுத்தும் அடிப்படையில் கணினியானது ........................................ பொருளுக்கான உதாரணமாகவும் கணினி மென்பொருளானது ........................................ பொருளுக்கான உதாரணமாகவும் அமையும்.

(ஆ) இணையத்தினூடாக இடம்பெறும் சகல வகையான வணிக நடவடிக்கைகளும் இலத்திரனியல் ........................................ எனவும் அதன் உப-பாகமானது இலத்திரனியல் ........................................ எனவும் அழைக்கப்படும்.

**32.** (அ) இலக்குச் சந்தையைப் பிளவுபடுத்தும் செயன்முறை சந்தை ........................................ எனவும் பண்டக்குறிக்காக நுகர்வோரின் மனநிலையில் நேர்மறையான மனப்பாங்கை உருவாக்குவது சந்தை ........................................ எனவும் அழைக்கப்படும்.

(ஆ) வியாபாரிகள் ........................................ பண்டக்குறியை உருவாக்கும் அதேவேளை ........................................ தேசிய பண்டக்குறியை உருவாக்குவர்.

**33.** (அ) பற்பசைக் கொள்கலன் (Tube) ஆனது ........................................ பொதியிடலுக்கான உதாரணமாகவும் அதனை உள்ளடக்கியிருக்கும் பெட்டியானது ........................................ பொதியிடலுக்கான உதாரணமாகவும் காணப்படும்.

(ஆ) சாதாரண பங்குகள் ........................................ மூலதனமாகக் காணப்படும் அதேவேளை முன்னுரிமைப் பங்குகள் ........................................ மூலதனமாகக் காணப்படும்.

**34.** பின்வரும் உதாரணங்களுடன் தொடர்புடைய பணத்தின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

| **உதாரணங்கள்** | **தொழிற்பாடு** |
|---|---|
| 1. ரூ. 8 000 இற்கு கைக்கடிகாரம் ஒன்றினைக் கொள்வனவு செய்தல் | 1. ........................................ |
| 2. ரூ. 25 000 ஐச் சேமித்தல் | 2. ........................................ |
| 3. கடனுக்கு வாங்கிய பொருட்களுக்கான பணத்தை 6 மாதங்களுக்குப் பின்னர் செலுத்துதல் | 3. ........................................ |
| 4. கைத்தொலைபேசி ஒன்றுக்கு ரூ. 30 000 விலையிடுதல் | 4. ........................................ |

**35.** (அ) களஞ்சியமற்ற ........................................ வியாபாரம் என்பதால் கருதப்படுவது ........................................ விற்பனை நிலையம் ஒன்று இல்லாமல் நடைபெறும் வியாபாரம் ஆகும்.

(ஆ) பொருட்கள், சேவைகள் மற்றும் தகவல்களின் இணையத்தினூடான வியாபாரத்தின் போதான B2G வணிக மாதிரியானது ........................................ இல் இருந்து ........................................ இற்கு இடம்பெறுவதாகும்.

**36.** (அ) இலங்கை மத்திய வங்கியின் நிலையான வசதி விகிதமானது நிலையான ........................................ வசதி விகிதத்தையும் நிலையான ........................................ வசதி விகிதத்தையும் உள்ளடக்கியுள்ளது.

(ஆ) பிரதம நிறைவேற்று அதிகாரி ........................................ முகாமைத்துவத்திற்கும் விற்பனை முகாமையாளர் ........................................ முகாமைத்துவத்திற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

**37.** (அ) இந்திய - இலங்கை வியாபார உடன்படிக்கையானது ........................................ தரப்பு உடன்படிக்கையாகும் அதேவேளை வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தமானது (NAFTA) ........................................ தரப்பு உடன்படிக்கை ஆகும்.

(ஆ) ISO ஆனது ........................................ சூழல் முகாமைத்துவத்திற்கு உரித்தாவதுடன் ISO 22000 ஆனது ........................................ பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு உரித்தானதாகக் காணப்படுகிறது.

**38.** (அ) தகவல் முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ள நபர்கள் ........................................ என அழைக்கப்படும் அதேவேளை உபகரணமொன்றில் நிரந்தரமாகக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மென்பொருளானது ........................................ என அழைக்கப்படும்.

(ஆ) தொழிலில் இருந்து விலகுதல் ........................................ இனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகக் காணப்படுவதுடன் தொழிலில் இருந்து விலக்குதல் ........................................ செயற்பாடாகக் காணப்படும்.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**39.** (அ) நிறுவனமொன்றின் தொழில் வெற்றிடங்கள் .................................. மற்றும் .................................. ஆளணியினர் மூலம் நிரப்பப்பட முடியும்.

(ஆ) ஊழியர்களது சாதாரண வேலை நேரத்திற்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் .................................. எனவும் அதற்கு மேலதிக வேலை நேரங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் .................................. எனவும் அழைக்கப்படும்.

**40.** (அ) வழங்குனர்களுக்கான கொடுப்பனவானது காசுப் பாய்ச்சற் கூற்றில் .................................. நடவடிக்கையாகக் கருதப்படுவதுடன் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் .................................. நடவடிக்கையாகக் கருதப்படும்.

(ஆ) கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தின் முழுமையான துணை நிறுவனமாகக் காணப்படும் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறைமை (தனியார்) நிறுவனமானது சந்தை .................................. மற்றும் .................................. நிலையமாகவும் தொழிற்படுகின்றது.

● **41** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுக.

**41.** வணிகங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் ஆதரவும் வழிகாட்டலும் வணிகரொருவருக்கு முக்கியமானதாக அமைகின்ற வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

(3) ..................................................................................................

(4) ..................................................................................................

**42.** உள்ளூராட்சி அமைப்புக்களின் கீழ் செயற்படும் வணிகங்களின் பண்புகள் **நான்கினை** எழுதுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

(3) ..................................................................................................

(4) ..................................................................................................

**43.** வணிகமொன்றுக்குத் தேவையான பிரதான வளங்கள் **நான்கினைப்** பெயரிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

(3) ..................................................................................................

(4) ..................................................................................................

**44.** உடைமை அடிப்படையில் பட்டியற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியற்படுத்தப்படாத வணிக வகைகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

| பட்டியற்படுத்தப்பட்டது | பட்டியற்படுத்தப்படாதது |
|---|---|
| (1) .................................................. | (1) .................................................. |
| (2) .................................................. | (2) .................................................. |

**45.** பேரளவு வணிகங்களில் இருந்து சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை வேறுபடுத்தக்கூடிய காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

(3) ..................................................................................................

(4) ..................................................................................................



Department of Examinations Sri Lanka

**46.** வணிகமொன்று பயன்படுத்தக்கூடிய கணினி வலையமைப்புக்களின் வகைகள் **நான்கினைப்** பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

(4) ..............................................................................................................

**47.** பின்வரும் ஒவ்வொரு கூற்றையும் அடிப்படையாகக் கொண்டு வணிகத்தின் மீது அக்கறையுடைய தரப்பினரைக் குறிப்பிடுக.

| | **கூற்று** | **அக்கறையுடைய தரப்பினர்** |
|---|---|---|
| 1 | முதலீட்டின் மீதான திரும்பலானது கடந்த வருடத்தைக் காட்டிலும் உயர்வடைந்துள்ளது. | 1 ............................................ |
| 2 | ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது, குறித்த நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கு அதிக பெறுமதி கிடைக்கும். | 2 ............................................ |
| 3 | பொருட்களுக்கான விலையிடல் மற்றும் சந்தைப்படுத்தல் கருவிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும். | 3 ............................................ |
| 4 | இந்நிறுவனமானது ஊழியர் தொழில் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. | 4 ............................................ |


**48.** குறுகிய கட்டுப்பாட்டு விசாலத்துடன் ஒப்பிடும்போது விரிந்த கட்டுப்பாட்டு விசாலத்தில் காணக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** எழுதுக.

| **அனுகூலங்கள்** | **பிரதிகூலங்கள்** |
|---|---|
| (1) ............................................................ | (1) ............................................................ |
| (2) ............................................................ | (2) ............................................................ |

**49.** இலத்திரனியல் சந்தைப்படுத்தலினூடாக வணிகருக்கும் நுகர்வோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, அச்சுறுத்தல் **ஒவ்வொன்று** வீதம் எழுதுக.

| | **வணிகருக்கு** | **நுகர்வோருக்கு** |
|---|---|---|
| **வாய்ப்பு** | ............................................................ | ............................................................ |
| **அச்சுறுத்தல்** | ............................................................ | ............................................................ |

**50.** பின்வரும் உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள 1, 2, 3 மற்றும் 4 எனும் கட்டங்களைப் பெயரிடுக.




(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

(4) ..............................................................................................................



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

அධ்‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

**32 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** வரையறுத்த ஆட்டோமோபைல் கம்பனியானது புகையற்ற (zero-emission) மோட்டார் வாகனங்களைப் பொருத்தி இலங்கையில் விற்பனை செய்கின்றது. நிறுவனத்தில் அதிகளவான ஊழியர்கள் பணிபுரிகின்ற போதிலும் ஓர் ஊழியர் ஒரு பணியினை மட்டுமே நிறைவேற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக, நிறுவனமானது வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்குப் பிந்திய சேவைகளையும் வழங்குகின்றது. மேலும் நிறுவனமானது இவ்வருடத்தில் வாகன உதிரிப்பாக உற்பத்தியினையும் ஆரம்பித்துள்ளது. இந்நிறுவனம் வருடாந்தம் அரசாங்கத்திற்கு பெருமளவு வருமான வரியைச் செலுத்துவதுடன் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

(i) (அ) கம்பனியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தயாரிப்புகள் **இரண்டினைப்** பெயரிட்டு, அவற்றுக்கு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார நிலைபேற்றுக்காக மேலே தரப்பட்ட நிறுவனமானது பங்களிப்புச் செய்துள்ள வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில், நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய விசைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகங்கள் ஏன் இலாபத்தினை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதனை **இரண்டு** காரணங்களினூடாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கு மேலதிகமாக இந்நிறுவனத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய ஏனைய சேவைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) "ஓர் ஊழியர் ஒரு பணியினை மட்டுமே நிறைவேற்றுகின்றார்" என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்குவதுடன் அதனூடாக வணிகம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் இந்நிறுவனம் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **மூன்றினை** விளக்குக. (03 புள்ளிகள்)

(v) நிலைபேறான சூழலின் அபிவிருத்திக்கு மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் பங்களிப்பு செய்யக்கூடிய வழிகள் **நான்கினை** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**2.** திருமதி சர்மிளா தனது ஆடை உற்பத்தி வணிகம் தொடர்பில் தெரிவித்த சில கருத்துக்கள் பின்வருமாறு.

"குறைந்தளவு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட எனது வணிகமானது சவால்களைக் கொண்டிருந்தாலும் அதனைச் செயற்படுத்துவதில் ஓரளவு சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் மாத்திரமே உட்பட்டதாக இருந்தது. வணிகம் தொடர்பிலான சகல தீர்மானங்களும் பொறுப்புக்களும் என்னாலேயே மேற்கொள்ளப்பட்டன. இவ் வணிகத்தினை ஒரு பங்குடைமை வணிகமாக மாற்றுவதற்கான எண்ணம் எனக்கிருந்த போதிலும் எனது கணக்காளர், வரையறுத்த தனியார் கம்பனியாகப் பதிவு செய்வது பொருத்தமானது எனக் கூறினார்."

(i) (அ) உடைமையாண்மையின் அடிப்படையில் மேற்குறித்த வணிகமானது எவ்வகையைச் சார்ந்ததெனக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ள வணிக வகைப்படுத்தலுக்குச் சார்பான காரணங்கள் **மூன்றினை** இச்சம்பவக் கற்கையிலிருந்து குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க.

Department of Examinations Sri Lanka

(ii) (அ) சர்மிளா தனது வணிகத்தினை 'சியானா டெக்ஸ்ரைல்ஸ்' எனும் பெயரில் பதிவு செய்வதற்கு எண்ணுகின்றாரெனின் அவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) சர்மிளாவின் வணிகத்திற்குப் பயன்படுத்தக்கூடிய உள்வாரி மற்றும் வெளிவாரி நிதி மூலங்கள் **ஒவ்வொன்றினைக்** குறிப்பிடுவதுடன் அவற்றில் காணப்படும் அனுகூலங்கள் ஒவ்வொன்றினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) சர்மிளாவின் வணிகத்தில் காணக்கூடிய வரையறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சர்மிளா தனது தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்காக விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கு எண்ணுவாராயின் அது எவ்வகையான வணிக இணைப்பு வகைக்கு உரித்தாகின்றது என்பதனைப் பெயரிட்டு, சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) சர்மிளா தனது வணிகத்தை பங்குடைமை வணிகமாக மாற்றுவதனூடாக அவருக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) பங்குடைமை வணிகத்துடன் ஒப்பிடும்போது வரையறுத்த தனியார் கம்பனியாக வணிகமொன்று பதிவு செய்யப்படுவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) அரச கூட்டுத்தாபனமொன்றின் குணாம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (i) (அ) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் மேம்பாட்டிற்காக அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் நிதி சாரா ஊக்குவிப்புக்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மூலதன முயற்சிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இலங்கை மத்திய வங்கியானது உள்ளூர் நாணயத்தின் பெறுமதியினை நிலையாகப் பேணுவதனூடாக வணிகங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மூலதனச் சந்தையில் முதனிலை விநியோகத்தர்களின் வகிபாகங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) குத்தகைக் கம்பனிகளின் சேவைகளினூடாக வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தன்னியக்க வங்கிச் சேவையினூடாக வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) சந்திரன் என்பவருக்கு நீங்கள் ரூ. 50 000 ஐ காசோலை மூலமாகக் கொடுப்பனவு செய்கிறீர்களாயின்,

(1) உயர்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் அதனைக் குறுக்குக் கோடிடும் முறையினை எடுத்துக்காட்டுக. (01 புள்ளி)

(2) காசோலை ஒன்று மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (01 புள்ளி)

(ஆ) (1) பிற்திகதியிடப்பட்ட காசோலை ஒன்றினை வழங்குவதற்கான காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(2) அத்தகைய காசோலையொன்றை சாதாரண வங்கிக் கணக்கொன்றினைப் பேணும் நபரினால் குறித்த தினத்துக்கு முன்னர் வங்கியில் வைப்பிலிட முடியுமா? உமது விடைக்கான காரணத்தினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(v) இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதனூடாக உள்ளூர் வணிகங்களுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) (அ) அரசாங்கம் ஆகக்குறைந்த சம்பளத்தைத் தீர்மானிப்பதன் மூலம் ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) நாணயக் கடிதத்தின் மூலம் ஏற்றுமதியாளருக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) வரவு அட்டைக்கும் கடன் அட்டைக்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) எண்ணியல் நாணயத்தின் (Digital Currency) அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) இலத்திரனியல் வியாபாரத்தின் மூலம் பொருட்களை விற்பனை செய்யும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) சில்லறை வியாபாரத்தில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய வழிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) தகவல் தொடர்பாடலில் முகாமையாளர் ஒருவர் தனது ஊழியர்களுடனான கூட்டங்களை நடாத்துவதனால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதான நோக்கங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) இலங்கையின் வெளிநாட்டு வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க.

Department of Examinations Sri Lanka

## பகுதி II

**5.** முகாமைத்துவம் என்பது 'மாற்றமடைந்து செல்லும் சூழலில் வணிகத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தி வெவ்வேறான நபர்களுடன் வேலை செய்யும் செயன்முறையாகும்.'

(i) (அ) மேற்குறித்த வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள முகாமைத்துவ எண்ணக்கருக்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகமொன்றின் இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) முன்வரிசை முகாமையாளர்களுக்கு தொழில்நுட்பத் திறன்கள் ஏன் மிகவும் முக்கியமானது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) கீழ்மட்ட முகாமையாளர்களுக்கு அதிகாரங்களைக் கையளிப்பதனால் நிறுவனத்தின் முகாமைத்துவம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) பயனுறுதிவாய்ந்த திட்டமிடலானது வணிகமொன்றுக்கு முக்கியம் வாய்ந்ததாகின்ற வழிகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முகாமையாளர் ஒருவர் வலுவினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) திலகனின் வணிகம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆகக் கூடிய மூலப்பொருள் நுகர்வு - நாளாந்தம் 200 அலகுகள்
- ஆகக் குறைந்த மூலப்பொருள் நுகர்வு - நாளாந்தம் 120 அலகுகள்
- மறு கட்டளைக் காலம் - குறைந்தது 10 நாட்கள்
  கூடியது 12 நாட்கள்
- மறு கட்டளைத் தொகை - 1600 அலகுகள்

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) மறு கட்டளை மட்டம்
(ஆ) ஆகக் குறைந்த இருப்பு மட்டம்
(இ) ஆகக் கூடிய இருப்பு மட்டம்
(ஈ) சராசரி இருப்பு (04 புள்ளிகள்)

(v) சந்தையில் காணப்படும் ஐந்து வகையான கணினிகளுள் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காக முகாமையாளர் என்ற வகையில் உங்களது தீர்மானம் எடுக்கும் செயன்முறையை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) (அ) உற்பத்தி முறை ஒன்றினைத் தெரிவு செய்யும்போது கருத்திற்கொள்ள வேண்டிய நியதிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) செயன்முறை உற்பத்தி முறைமையில் கணினி உதவியுடனான உற்பத்தி (CAM) முறை பொருத்தமானதாக அமைவதற்குரிய காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) 'ஊழிய உற்பத்தித்திறனை' வரைவிலக்கணப்படுத்துவதுடன் அதனை விருத்திசெய்து கொள்வதற்காக நிறுவனமொன்று பயன்படுத்தக்கூடிய முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் பொருட்களை உற்பத்தி செய்யும்போது கருத்திற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலின் மூலம் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் தொடர்பாடலில் காணப்படும் வரையறைகள் **நான்கினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) மின்ஸ்பர்க் என்பவரின் முகாமைத்துவ தீர்மான வகிபாகத்திற்கமைய முகாமையாளர் ஒருவர் முயற்சியாண்மையாளராக இனங்காணப்படுவது ஏன்? (01 புள்ளி)

(ஆ) ஊக்கப்படுத்தலின் மூலம் நிறுவனம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **மூன்றினையும்** ஊழியர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **மூன்றினையும்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(v) பசுமை முயற்சியாண்மையாளர்கள் பொருளாதாரம் ஒன்றுக்கு முக்கியமாகின்ற வழிவகைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க.

Department of Examinations Sri Lanka

**7.** சவர்க்கார உற்பத்தி நிறுவனமொன்று தமது உற்பத்திகளை வேறுபட்ட நுகர்வோர் குழுக்களுக்கு அமைவாக வெவ்வேறான வியாபாரப் பெயர்களில் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. புதிய உற்பத்தி ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இந்நிறுவனமானது சந்தை ஆய்வினை மேற்கொள்கிறது.

(i) (அ) வேறுபட்ட நுகர்வோர் குழுக்களுக்கு அமைவாக இந்நிறுவனமானது தமது உற்பத்திப்பொருட்களை ஏன் உற்பத்தி செய்கின்றது என்பதனை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இந்நிறுவனமானது வாடிக்கையாளர் எண்ணக்கருவையா அல்லது விற்பனை எண்ணக்கருவையா நடைமுறைப்படுத்துகின்றது என்பதைக் காரணங்களுடன் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இவ்வுற்பத்திப்பொருளானது எவ்வகை நுகர்வோர் உற்பத்திப்பொருளுக்குள் அடங்கும்? (01 புள்ளி)

(ஆ) புதிய உற்பத்திப்பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் சந்தை ஆய்வினை மேற்கொள்வதன் மூலம் நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **மூன்றினை** விபரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) உற்பத்திப்பொருளொன்று அதன் உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் முதிர்ச்சிக் கட்டத்தினை அடைந்த பின்பு அதனை நீடித்துக் கொள்வதற்காக பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்கள் **நான்கினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) நிதிப் பாதீட்டைத் தயாரிப்பதன் மூலம் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மூலதன முதலீட்டுத் தீர்மானங்களுக்கு உதாரணங்கள் **நான்கு** தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'செயற்பாட்டு விகிதம்' என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு, அதில் காணப்படும் அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) 'வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை' என்றால் என்ன என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (i) (அ) வெளிவாரியாக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'வேலையின் போதான பயிற்சியின்' ஊடாக ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) செயற்றிறன் மதிப்பீடு நிறுவனமொன்றுக்கு முக்கியமானதாகும் வழிகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வேலைக்கான மிகப் பொருத்தமான விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு நிறுவனமொன்று பயன்படுத்தக்கூடிய முறைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) பயனுறுதிவாய்ந்த தகவல் முறைமை ஒன்றின் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இணையத்தினூடாக தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும்போது வணிகமொன்றுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) வணிகத் திட்டம் ஒன்றின் முக்கியத்துவம் பிரதிபலிப்பதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (01 புள்ளி)

(ஆ) வணிகத் திட்டமொன்றினைத் தயாரிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(v) உற்பத்தி ஒன்றின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூ. 25 மில்லியனாக இருக்கும்போது அதன் நிலையான கிரயம் ரூ. 15 மில்லியன் ஆகும். வணிகத்தின் மொத்த வருமானம் ரூ. 20 மில்லியன் ஆகும். எதிர்காலத்தில் இந்த உற்பத்திப்பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும் என விற்பனை எதிர்வுகூறல் அறிக்கை தெரிவிக்கின்றது. ஆயினும் இந்த உற்பத்திப்பொருளின் உற்பத்தியினை இடைநிறுத்த வேண்டுமென உற்பத்தி முகாமையாளர் ஆலோசனை வழங்கியுள்ள அதேவேளையில் அவ்வுற்பத்திப்பொருளின் உற்பத்தியைத் தடையில்லாமல் தொடர வேண்டுமென விற்பனை முகாமையாளரால் உத்தேசிக்கப்பட்டது. இந்த உற்பத்திப்பொருளின் உற்பத்தியினை தடையில்லாமல் தொடர வேண்டுமா அல்லது இடைநிறுத்த வேண்டுமா என்ற உமது தீர்மானத்தைக் குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணங்கள் **மூன்றினை** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka